(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 109.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011, யூலை 21, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0479/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வகிபாகம் யாதென்பதையும்;

(ii) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்டு வரும் சட்ட விரோத கொடுக்கல் வாங்கல் விவகாரங்களின் எண்ணிக்கையையும்;

(iii) விசாரணை மேற்கொள்ளப்பட்ட வழக்குகள் மற்றும் அவற்றின் பெயர்கள் என்பவற்றையும்;

(iv) விசாரணைகளின் இற்றை வரையிலான பெறுபேறுகள் யாதென்பதையும்;

(v) வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளனவா அல்லது அபராதம் விதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) விதிக்கப்பட்ட அபராதத் தொகைகளையும் ஒவ்வொரு வழக்கும் எப்போது தீர்த்து வைக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0922/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 6 வருட காலப்பகுதியில் தரத்தில் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்த கம்பனிகளென இனங்காணப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அக் கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) இந்த ஒவ்வொரு கம்பனியும் தரத்தில் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்ததன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(iv) ஒவ்வொரு கம்பனியும் அரசாங்கத்திற்கு மீளச் செலுத்தியுள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தரத்தில் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்ததாக இனங்காணப்பட்டுள்ள ஒவ்வொரு கம்பனியினதும் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையைச் சேர்ந்தோரின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்,

(ii) இக்கம்பனிகளில் தற்போது கறுப்புப் பட்டியலில் (Black List) இடப்பட்டு தடைசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) அந்த கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி தடைசெய்யப்பட்டுள்ள கம்பனிகளிலிருந்தும் 2006 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மீண்டும் மருந்துகளை கொள்வனவு செய்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1047/ '10

3.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றுகின்ற தொண்டர் ஆசிரியர்களை ஆசிரிய உதவியாளர்களாக நியமிப்பது தொடர்பாக 2006.10.25 ஆம் திகதி அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றுக்கமையவும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47உப ஆம் இலக்க, 2007/02/10 ஆம் திகதிய அறிவுறுத்தல்களுக்கமையவும், மத்திய மாகாண கல்வி அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதற்கமைய மத்திய மாகாணத்தில் ஆசிரிய உதவியாளர் பதவிக்காக விண்ணபித்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) நேர்முகப் பரீட்சையில் மேற்படி பதவிக்கு தகைமை பெற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) இவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவை என்பதையும்;

(iv) இவர்களில் ஏற்கெனவே மேற்படி நியமனங்களைப் பெற்ற ஆட்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்களும் முகவரிகளும் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்குரிய கல்வி வலய மட்டத்தில் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1223/ '11

4.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1417/ '10

5.

கௌரவ (அல் ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் சவலக்கடை தொடக்கம் நாவிதன்வெளி ஊடாக அன்னமலை வரையிலான பிரதான வீதியை திருத்தும் படி இப்பிரதேச சமூக அமைப்புகள் அரசாங்கத்தைக் கோரியுள்ளதென்பதையும்,

(ii) இவ்வீதியில் கல்முனை தொடக்கம் மண்டூர் வரை பஸ் சேவையொன்று நடைபெறுவதுடன் இது படுவான்கரை பிரதேசம் வரை செல்லும் பிரதான வீதிகளில் ஒன்றென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) நாவிதன்வெளி பிரதேச சபை, அண்ணமலை மகா வித்தியாலயம், ஸ்ரீ சக்தி வித்தியாலயம், ஸ்ரீ சண்முக வித்தியாலயம் ஆகியவற்றுக்கு பிரவேசிக்குக் கூடிய இவ்வீதியின் முக்கியத்துவம் கருதி உடனடியாக திருத்துவதற்கு அவர் நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0851/ '10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் உள்நாட்டு அரிசி நுகர்வையும்;

(ii) 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளுக்கான உத்தேசிக்கப்பட்ட நுகர்வையும்;

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 பெப்ரவரி மாதத்தில் 100,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்த அரசாங்க நிறுவனங்களின் பெயர்களையும்;

(ii) அவ் இறக்குமதிக்கான நிதி மூலத்தையும்;

(iii) மேற்கண்டவாறு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் இறக்குமதி விலை விற்பனை விலை, விற்பனை செய்யப்பட்ட அளவு கையிருப்பில் உள்ள அளவு ஆகியவற்றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் விலை கிலோ ஒன்றிற்கு இலங்கை ரூபா 65/- இற்கு மேற்பட்டதாக இருக்கையில் மேற்கண்டவாறு இறக்குமதி செய்யப்பட்ட அண்ணளவாக 30,000 மெற்றிக் தொன் அரிசி தனியார் துறையினருக்கு கிலோ ஒன்றிற்கு இலங்கை ரூபா 31 எனும் விலையில் 2010, செத்தெம்பர் மாதத்தில் விற்கப்பட்டதையும்;

(ii) தனியார் வர்த்தகர்கள் அவ் அரிசியை உள்ளூர்ச் சந்தைகளில் விற்பனை செய்யக்கூடாது என அரசாங்கம் வலியுறுத்தியிருந்த போதும் அவர்கள் அதை விற்பனை செய்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஈ) மேற்கூறியவாறு அரிசியை விற்பனை செய்த தனியார் வர்த்தகர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1001/ '10

7.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண அரச வைத்தியசாலைகளில் பணி புரியும் தாதிமார்கள் மற்றும் அதற்குக் கீழுள்ள பதவிகளில் நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களுக்கு மாதாந்தச் சம்பளமாக வழங்கப்படும் தொகை யாதென்பதையும்;

(iii) மேலதிக நேரக் கொடுப்பனவாக வழங்கப்படும் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 நவெம்பர் மாதச் சம்பளத்துடன் ஒற்றோபர் மாதத்துக்காக அவர்களுக்கு வழங்கப்படும் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) இவ்வாறான நிலைமையின் கீழ் ஊழியர்களுக்கு தமது வேதனத்தை மாதாந்தம் முகாமை செய்வதில் சிக்கல் ஏற்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) இவ்வாறு மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கல் தாமதமாவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இந் நிலைமையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) இதற்காகத் தேவைப்படும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1048/ '10

8.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய மாத்தளை மாவட்டத்தின் நாஉல, வில்கமுவ, கலேவெல, மாத்தளை ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 31 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்;

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1224/ '11

9.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக தேசிய மரபுரிமைகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1449/ '11

10.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இந்நாட்டிலுள்ள பெரும் எண்ணிக்கையிலான தபால் அலுவலகங்களில் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு அல்லது தமிழ் மொழியில் தேர்ச்சியடைந்த உத்தியோகத்தர்களுக்கு பாரியதொரு பற்றாக்குறை நிலவுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) அனைத்து தபால் அலுவலகங்களிலும் நிலவும் அவ்வாறான வெற்றிடங்களின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்தும் வகையில் அவ்வாறான வெற்றிடங்களை நிரப்பும் முகமாக துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல்,ஏன்?

0852/ '10

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 இல் பொதுநலவாய நாடுகளுக்கான விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கான முயற்சியில் இலங்கை ஈடுபட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆம் எனில் இந்நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களையும்;

(iii) இவ் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கு விண்ணப்பிப்பதற்கான ஆரம்ப ஒப்புதல் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) இவ் விடயம் தொடர்பில் பிரதான வகிபாகத்தை வகிப்பவர் யார் என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இவ் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பு இலங்கைக்கு வழங்கப்படும் பட்சத்தில் மேற்படி விளையாட்டுப் போட்டிகளை நடாத்த எதிர்பார்க்கப்படும் மாவட்டத்தையும் நகரத்தையும்;

(ii) அதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பிலான மொத்த முதலீட்டுச் செலவு எவ்வளவு என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) இது தொடர்பிலான வேட்பு மனுக்கள் கோரப்படும் பொழுது இலங்கையின் வேட்பு மனுவை முன்மொழிகின்ற, வழிமொழிகின்ற நாடுகள் எவை என்பதையும்;

(ii) இலங்கையைத் தவிர 2018 இல் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக போட்டியிடுகின்ற ஏனைய நாடுகள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1002/ '10

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவற்றில் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தீர்வுகள் வழங்கப்படவுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனம் சம்பந்தமாகவும் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) அதன் பிரகாரம் ஆகக் கூடிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்

அவர்குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1049/ '10

13.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை, நுவரெலியா, ஹங்குரன்கெத்த, கொத்மலை மற்றும் ஹட்டன் ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 50 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்,

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1225/ '11

14.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1450/ '11

15.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார், முத்தமிழ் நகர்ப் பகுதியில் மன்னார் கல்வி வலயத்தின் ஒத்துழைப்புடன் அமுல்படுத்தப்படுகின்ற பெண்களுக்கான முறைசாரா கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ள பண்ணை வேலைப் பயிற்சிப் பாடநெறியை நடாத்தும் பொருட்டு பிரதேசத்தில் பொதுத் தேவைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தை வழங்காது தனி ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதையும்;

(ii) இதன் காரணமாக குறித்த பிரதேச பெண்கள் மேற்படி கட்டடத்தின் வெளியே நிலத்தில் அமர்ந்தவாறேனும் மேற்படி பாடநெறியை கற்க வேண்டிய கட்டாய நிலை உருவாகியுள்ளது என்பதையும்;

(iii) பெண்களுக்கான முறைசாரா கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதில் எழுந்துள்ள மேற்படி தடையேற்படுத்தும் நிலைமை சம்பந்தமாக மன்னார் பிரதேச செயலகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடநெறியை நடாத்தக் கூடியவாறு பொதுத் தேவைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள மேற்படி கட்டடத்தை உடனடியாக திறந்து வைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## அனுதாபப் பிரேரணைகள்

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரிறோன் பெர்னாண்டோ

2.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அல்பட் த சில்வா

3.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈ.எல்.பீ. ஹூருல்லே

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் 2011.07.22 ஆம் திகதி சபை அமர்வு நேரம் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1964 ஒற்றோபர் 1 ஆம் திகதிய 14186 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் (v) ஆம் பகுதியை திருத்தஞ் செய்து அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் கடற்றொழில் நீரியல் வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 யூன் மாதம் 30 ஆம் திகதிய 1712/21 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 3.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 4.

ஊழியர் ஒய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 10.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 11.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

16.

அநுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

பஹலகம சிறீ சோமரத்தன நாயக்க தேரர் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

18.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

19.

லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் சுமித்ரா பீரிஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்ட மூலம் — பரிசீலனை.

20.

ஒலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

21.

இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.